பகுதி IV (அ) — மாகாண சபைகள்

மாகாண சபை அறிவித்தல்கள்

தென் மாகாணத்தின் மாகாண சபை

1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டம்

5(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

தென் மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின்கீழ் எனக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய தென் மாகாண, மாகாண சபையின் முதலமைச்சரும் நிதியமைச்சருமான திரு. மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகிய நான் இக்கட்டளையின் கீழ் இணைக்கப்பட்டுள்ள விபரமானது 1995 நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கிறேன்.

"தேசிய அரசுப் பேரவையின் 1972 இலக்க 05 வது கூட்டுறவுச் சங்க சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தென் மாகாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கம்".

மஹிந்த யாப்பா அபேவர்தன,
முதலமைச்சரும் நிதி அமைச்சரும்,
தென் மாகாண சபை.

காலி,
1996 ஜூன் 27.

07 — 282/1

தென் மாகாணத்தின் மாகாண சபை

1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டம்

7(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

தென் மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவினால் எனக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 1991, சனவரி 12 ஆம் திகதிய 644/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் கட்டளையின் III ஆம் பகுதியின் கீழ் தங்க நாணயங்கள், ஆபரணங்களுக்கான தங்க நகை வாங்கி விற்கும் வியாபாரத்தின் விற்பனை வரி தொடர்பாக வரி அறவு நூற்றுக்கு 10 ஆனது 1995 நவெம்பர் 17 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் வரியறவு நூற்றுக்கு 5 ஆக மாற்றுவதாக நியமிக்கின்றேன்.

மஹிந்த யாப்பா அபேவர்தன,
முதலமைச்சரும் நிதி அமைச்சரும்,
தென் மாகாண சபை.

காலி,
1996 ஜூன் 27.

07 — 282/2